நல்லூர் [illegible] லகம்
மாநகர [illegible]
யாழ்ப்பாணம்

பக்கங்கள் ஆறு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 14 புதன்கிழமை (27-05-1992) UTHAYAN — A Lively National Tamil Daily; கதிர் 181

# பிரேமதாசாவின் வருகையை ஒட்டி வவுனியாவில் படையினர் கெடுபிடி!

## புலிகள் மீதான தடை தி. மு. க. எதிர்க்காது!

### முரசொலி மாறன் தகவல்

சென்னை, மே 27

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது இந்தியா விதித்துள்ள தடையை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்காது.

இவ்வாறு தி. மு. க. தலைவர்களில் ஒருவரான முரசொலி மாறன் தெரிவித்திருக்கின்றார்.

புலிகள் இயக்கம் தடை செய்யப்பட்டதற்கு தி.மு.க. பெரிதாக எதிர்ப்பு ஏதும் தெரிவிக்கவில்லை என்பதும் —

தி. மு. க. தலைவர் திரு. மு. கருணாநிதி உட்பட கழகப் பிரமுகர்கள் அனைவரும் ''மதில்மேல் பூனை'' யாக இருந்து வருகின்றனர் என்பதும் தெரிந்ததே.

விடுதலைப் புலிகள் இயக்கத் தடையை முதலமைச்சர் ஜெயலலிதா தமது அரசியல் எதிரிகளைப் பழிவாங்க பாவிப்பார் என்று மட்டுமே திரு. கருணாநிதி அறிக்கை ஒன்றில் தெரிவித்திருந்தார். [ஓ-எ]

## குடும்பப் பதிவு அட்டைகளை 31க்கு முன் பெற அறிவுறுத்து

யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வாழும் மக்களுக்கான குடும்ப பதிவு அட்டைகளை இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கிராம சேவையாளர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த அட்டையைப் பெறாதவர்கள் தங்களது தேவைகளுக்காக அலுவலகங்களை அணுகும்போது சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை—

யாழ். மாவட்டத்துக்கு வெளியே இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வந்தவர்களின் விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. அவர்களுக்குரிய குடும்பப் பதிவு அட்டைகளை 31 ஆம் திகதிக்கு முன்னர் விநியோகிக்குமாறு கிராமசேவையாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

கல்வி, தொழில் நோக்கங்களுக்காக வெளிமாவட்டங்களில் இருந்து வந்து யாழ். மாவட்டத்தில் வசிக்கும் குடும்பங்கள், தனிநபர்களைப் பதிவு செய்யும் வேலைகளும் இப்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன. [அ-3]

### ஆயுதக் கடத்தல் தொடர்பாக

## கைதான சுவிஸ் பிரசையின் மனைவி வேலையில் நிறுத்தம்

கொழும்பு, மே 27

ஆயுதக் கடத்தல் தொடர்பாகக் கைதாகிய சுவிஸ் பிரசையின் இலங்கை மனைவியை, அவர் வேலைசெய்து வந்த வெளிநாட்டு வங்கியின் கொழும்புக்கிளை வேலையில் இருந்து இடைநிறுத்தி வைத்துள்ளது.

வெளிநாட்டு வங்கிக்கிளையின் முகாமையாளரின் அந்தரங்கச் செயலாளராக இப்பெண் பணியாற்றி வந்தார்.

இவரது தாயார் ஒரு தமிழ்ப் பெண். ஜெனிவாவில் அவர் வசித்து வருகின்றார். பெண்ணின் தந்தை ஒரு சிங்களவர். அவர் இறந்து விட்டார்.

இதே வேளை —

சந்தேக நபரான சுவிஸ் பிரசை வேறொரு வங்கியில் வைத்துள்ள அவரது கணக்குகளை பொலீஸார் ஆராய்ந்து வருகின்றனர். தேவையேற்படின் அவரின் மனைவி தனது பெயரில் தான் வேலை செய்துவந்த வங்கியில் வைத்துள்ள கணக்கையும் பொலீஸார் ஆராய்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது (ஓ-எ)

## யாழ். ஆஸ்பத்திரியில் மின் விநியோகம் சீர்குலைவு

யாழ்ப்பாணம், மே 27

யாழ். ஆஸ்பத்திரி ஜெனரேட்டர்களுக்குத் தேவையான டீசல் பற்றாக்குறை காரணமாக மின்சாரம் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் ஆஸ்பத்திரியில் முக்கிய சேவைகள் பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக எக்ஸ்ரே பிரிவு மிகமோசமாகப் பாதிப்படைந்துள்ளது. இப்பிரிவுக்கு ஒரு நாளைக்கு [6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழர்கள் மீது இம்சை

யாழ்ப்பாணம், மே 27

ஜனாதிபதி பிரேமதாஸா வவுனியாவுக்கு வருவதை ஒட்டி அங்கு படையினர் தமிழர் மீதான கெடுபிடி நடவடிக்கைகளை தீவிரப் படுத்தியிருக்கின்றனர். அப்பாவித் தமிழர்கள் பல வழிகளாலும் இம்சைக்கு உள்ளாக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

இம்மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் வவுனியாவில் ஜனாதிபதி இடம் பெயர் சேவை நடைபெறவிருக்கிறது. இந்த அமர்வில் பங்குபற்றுவதற்காக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவும் அவருக்குக் கீழ் பணியாற்றும் உயரதிகாரிகளும் வவுனியாவுக்கு வரவிருக்கின்றனர்.

வவுனியாவில் புனர் நிர்மாண, புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் என்ற போர்வையில் சிங்களக் குடியேற்ற வேலைகள் இடம்பெற்று வருவது தெரிந்ததே. அதனைத் துரிதப்படுத்தும் நோக்கத்திலேயே ஜனாதிபதி இடம் பெயர் சேவை வவுனியாவில் நடத்தப்படுவதா (6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். மாவட்டத்தில் இன்று முதல் ஊரடங்கு

கொழும்பு, மே 27

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இன்று புதன்கிழமை காலை ஆறு மணி தொடக்கம் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் அமுல் செய்யப்படும் என்று கூட்டுப் படைகள் தலைமை அலுவலகம் நேற்று அறிவித்தது.

## பஞ்சாப்பில் 5 தமிழர் கொலை

புதுடில்லி, மே 27

பஞ்சாப்பில் 5 தமிழ் பொறியியலாளர்களை சீக்கியத் தீவிரவாதிகள் நேற்று சுட்டுக் கொன்றனர்.

பஞ்சாப் மாநிலத்தில் அம்மாநிலத்தைச் சேராதவர்கள் வந்து பணியாற்றுவதை சீக்கிய தீவிரவாதிகள் எதிர்க்கின்றனர். கடந்த மாதம் ஒரு தொழிற்சாலையில் கடமையாற்றிய — பஞ்சாபியரல்லாத — 16 பொறியியலாளர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. [உ-10]

## சிப்பாய் பலி

யாழ்ப்பாணம், மே 27

வெற்றிலைக்கேணியில் நேற்று முன்தினம் மாலை 5 மணிக்கு விடுதலைப் புலிகள் குறிபார்த்து சுட்டதில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார். [ஒ-3]

### முச்சந்தி முரளி



அப்ப... மர்மப் படம் மாதிரி இருக்குமெண்டு சொல்லுங்கோ......!

## அம்பாறைப் பகுதியில் கண்ணிவெடிச் சம்பவங்கள்

அம்பாறை மாவட்டத்தில் இரு வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதல்களில் அதிரடிப்படையினருக்கு பலத்த இழப்புக்கள் ஏற்பட்டதாக விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த 22 ஆம் திகதி கண்ணகி புரத்தில் ரோந்து வந்த படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் அதிரடிபபடையினருக்கு பெரும் சேதமேற்பட்டதாகவும் —

கடந்த ஞாயிற்றுக்கிழமை திருக்கோவில் பகுதியில் கஞ்சிகுடிச்சாறு முகாமில் இருந்து டிராக்டரில் ரோந்து வந்த படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணிவெடித் தாக்குதலில் ஒரு உயர் அதிகாரி கொல்லப்பட்டதாகவும், இருவர் காயமடைந்ததாகவும், டிராக்டர் சேதமடைந்ததாகவும் விடுதலைப் புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. [ஓ-3]

## யாழ். நுண்கலைத்துறை மாணவர்கள் ஊர்வலம்

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மாணவர்கள் நேற்றுக் காலை ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

இந்தத் துறையில் பண்ணிசை கற்கை நெறியில் பாடத்திட்டம் சம்பந்தமாக விரிவுரையாளர்களின் ஆலோசனையை நிர்வாகம் மதிக்காததை கண்டித்தே ஊர்வலம் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மருதனார்மடம் நுண்கலைப் பிரிவில் இருந்து ஆரம்பமான ஊர்வலம் யாழ். பல்கலைக்கழகத்தில் முடிவடைந்தது.

அங்கு துணைவேந்தர், கலைப் பீடாதிபதி, நுண்கலைத்துறைத் தலைவர் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்பட்டன,

தமது கோரிக்கைக்குப் பதில் கிடைக்கும் வரை தாம் வகுப்புக்களை தொடர்ந்து பகிஷ்கரிக்க இருப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர். (ஓ-3)

### ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற

## அரசியல் கொலைகள் வீடியோ படமானது!

### அது சர்வதேச சந்தையில்!!

கொழும்பு, மே 27

ஸ்ரீலங்காவில் இடம்பெற்ற அரசியல் கொலைகள் அடங்கிய வீடியோ படம் ஒன்று சர்வதேச சந்தைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பிரதி பொலீஸ் மா அதிபர் உடுகம்பொலவின் அனுசரணையுடன் தயாரிக்கப்பட்டிருக்கும் இந்த வீடியோப் படத்தில் அரசியல் படுகொலைகள், ஆயுத விற்பனை, லஞ்சம், போதைப் பொருள் விற்பனை என்பன பற்றிய விவரங்கள் அடங்கி [6 ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எதிர்வரும் 28 ஆம் திகதி
# சந்திரசேகரனை தம்முன் ஆஜர் செய்ய நீதிபதி உத்தரவு

கொழும்பு, மே 27 மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ. சந்திரசேகரனை நாளை 28 ஆம் திகதி தம் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு கண்டி மேல் நீதிமன்ற நீதிபதி குணவர்த்தனா உத்தரவிட்டார்.

நீதிபதியின் உத்தரவின்படி சந்திரசேகரன், உப தலைவர் வ. தர்மலிங்கம், செயலாளர் பாவா அப்துல் காதர் ஆகிய மூவரும் புதிய மகஸீன் சிறைச்சாலைக்கு மாற்றப்படாமல், தொடர்ந்து ஆறாம் மாடியில் தடுத்து வைத்திருப்பதை ஆட்சேபித்து சட்டத்தரணி அப்பாத்துரை விநாயகமூர்த்தி மனு ஒன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

இதன் மீது தீர்ப்பு வழங்குகையிலேயே இம் மாதம் 28 ஆம் திகதி சந்திரசேகரனை தம் முன்னிலையில் ஆஜர் செய்யுமாறு நீதிபதி உத்தரவிட்டார்

[இ-3]

## 4 ஆயிரம் நக்ஸலைட்டுகள் சரண்!

புதுடில்லி, மே 27 ஆந்திராவில் நக்ஸலைட் மக்கள் போர்க் குழு இயக்கம் தடை செய்யப்பட்டதை அடுத்து அந்த இயக்கத்தைச் சேர்ந்த 4000க்கும் மேற்பட்டவர்கள் சரண் அடைந்து விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

நக்ஸலைட் இயக்கமான மக்கள் போர்க் குழுவிடம் இருந்து ஆந்திராவை விடுவிக்கும் முதல் முயற்சியே அதன் மீதான தடை என்று ஆந்திரா முதல்வர் ஜனார்த்தன ரெட்டி தெரிவித்தார்.

[இ-த]


# எடிசன் அக்கடமி

யாழ். இந்து அருகில்
ஜே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

## ஆண்டு 10, 11 - O/L Day Class

புதிய 2 ஆம் பிரிவுகள்
ஆரம்பம்: 30 05-1992 சனி 7-30 மணி

| | |
|---|---|
| கணிதம்: | பாஸ்கரன் (பல்கலைக்கழகம்) |
| விஞ்ஞானம் | J. R. சூரி<br>J. J. கொலின்ஸ் |
| சமூகக்கல்வி | K. S. முத்துலிங்கம் |
| தமிழ்: | தங்கவேல்<br>வாமன் |
| ஆங்கிலம்: | மனோரஞ்சன் |
| வர்த்தகம்: | ராஜ் (பல்கலைக்கழகம்) |

[21145]



யாழ்ப்பாணம் திருவண்ணை நகர்
அருள்மிகு வாலாம்பிகா சமேத
## விசுவலிங்க வைத்தீசுவர சுவாமி திருக்கோயில்
( வண்ணை சிவன் கோயில் )
# லட்சார்ச்சனை பூர்த்தி விழா

மேற்படி திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அருள்மிகு வாலாம்பிகா சமேத விசுவலிங்க வைத்தீசுவர சுவாமிக்கு ஆங்கீரச ஆண்டு சித்திரைத் திங்கள் 25ஆம் நாள் [7-5-92] வியாழக்கிழமை தொடக்கம் நிகழ்ந்து வரும் லட்சார்ச்சனை வைகாசித் திங்கள் 15ஆம் நாள் [ 28-5-92 ] வியாழக்கிழமை பின்வரும் நிகழ்ச்சியில் குறிப்பிட்டவாறு நிறைவுபெற இருக்கின்றதென்பதை மிக மகிழ்வோடு அறியத்தருகின்றோம்.

★ நிகழ்ச்சிகள் ★

வைகாசி 14 [27-5-92] புதன்கிழமை
மாலை 5-30 மணி: சங்கு ஸ்தாபனம்
6-30 மணி: யாக பூசை

வைகாசி 15 [28-5-92] வியாழக்கிழமை
அதிகாலை 5-00 மணி: திருவனந்தல். 5-30 மணி: புண்ணியாகவாசம், 7-00 மணி: காலசந்தி, 7-45 மணி: சங்கு பூசை ஆரம்பம், முற்பகல் 10-00 மணி: மங்கள இசையுடன் மகாபிஷேகம், மங்கள இசை, 11-00 மணி: [அ] பூர்ணாகுதி [ஆ] அர்ச்சனை [இ] வேத, திருமுறை பாராயணம் (திருமுறை கலாநிதி, சங்கீத பூஷணம் திரு. வி. மு. நவரத்தினம் அவர்கள் கலந்து கொள்வார்கள்.) [ஈ] சங்காபிஷேகம் [உ] உச்சிக்கால பூசையில் அன்னப்பாவாடையுடன் லட்சார்ச்சனை பூர்த்தி.

சொற்பொழிவு :
கவிஞர் காரை சுந்தரம்பிள்ளை அவர்கள்
பொருள் : "கல்லும் கனியாகும்"

உபயம் : திரு. ம. யோகலிங்கம்

சங்காபிஷேகத்துக்கு பால், தயிர், இளநீர், கரும்பு, தேன், நெய், பழவகைகள் ஆகிய அபிஷேகத் திரவியங்களும், மா, பலாசு, கருங்காலி முதலான சமித்து வகைகளும் மலர் [சிறப்பாக தாமரை, செங்கழுநீர்] வில்வம் முதலான அர்ச்சனைப் பொருட்களும் கொடுத்து வழிபாடாற்றலாம். அடியார்கள் பயன் பெற்றுய்வார்களாக.

யாழ்ப்பாணம். ஆலய பரிபாலனசபை
(சி/2618)


## ஷெல் தாக்குதல்

பலாலி இராணுவ முகாமில் இருந்து நேற்று அதிகாலை 12. 30 மணிக்கு நவக்கிரி, செல்வநாயகபுரம், பத்தமேனி, இடைக்காடு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இடையிடையே துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டன. (ஒ-15)

## அத்தியாவசியப் பொருள்களுக்கு புதிய விலைகள்

அத்தியாவசியப் பொருள்களுக்கான புதிய விலை விபரங்களை யாழ். செயலகப் புனர்வாழ்வுப் பிரிவு நேற்று வெளியிட்டது. பொருள்களும் [கிலோவில்] அவற்றுக்குரிய சில்லறை விலைகளும் வருமாறு :-

அரிசி — 16 ரூபா 60 சதம், மா — 13 ரூபா 60 சதம், சீனி - 27 ரூபா, துவரம்பருப்பு - 36 ரூபா, மல்லி — 45 ரூபா, உள்ளி - 38 ரூபா, பெருஞ்சீரகம் - 145 ரூபா, நற்சீரகம் - 63 ரூபா, வெந்தயம் - 28 ரூபா

## 65 பயணிகள் விபத்து நடந்த படகில் சென்றனர்!

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைப் பகுதி வாவியில் கடந்த ஞாயிறு விபத்துக்குள்ளான படகில் விபத்து நடந்த சமயம் 65 பயணிகள் இருந்தனர். இந்தச் சம்பவத்தில் 16 பயணிகள் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே. உயிரிழந்தவர்களில் ஏழு பேர் பெண்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மண்முனைத்துறையில் இருந்து வாவிக்கு அப்பால் உள்ள மகிழடித் தீவுக்குச் சென்றுகொண்டிருந்த பயணிகளே இவ்விபத்தில் பலியகினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ-எ]

## விண்ணக வாழ்வின் எட்டாவது ஆண்டு நினைவு அஞ்சலி



கந்தப்பு ஸ்ரீபன் தேவராஜா

மலர்வு: 22 — 08 — 1946
உதிர்வு: 27 — 05 — 1984

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்திலும் மறவோம்"

இவரது பிரிவால் வாடும்: மனைவி, மக்கள்.
இல. 7, கற்குழி ஒழுங்கை, சாவகச்சேரி.

[20927]

## தீவுப்பகுதியில்
# செஞ்சிலுவை அலுவலகம் திறக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 27 தீவுப்பகுதியில் இன்னலப்படும் மக்களின் நலன்களைக் கவனிக்க செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகம் ஒன்றை அங்கு திறக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

இடம்பெயர்ந்த தீவக மக்கள் நலன்காக்கும் கழகத்தைச் சேர்ந்த ஏழு பிரதிநிதிகள் நேற்று செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகளைச் சந்தித்து பேச்சு நடத்திய சமயம் இந்தக் கோரிக்கையை விடுத்தனர்.

தீவுப்பகுதியில் இருந்து மக்களை அழைத்து வருதல், அகதி முகாம்களைப் பராமரித்தல் போன்ற விடயங்கள் குறித்தும் இச்சந்திப்பின் போது ஆராயப்பட்டது

# பாகிஸ்தான்-இந்திய பேச்சுக்கள் ரத்து!

புதுடில்லி, மே 27 பாகிஸ்தானுடனான வெளியுறவுச் செயலாளர் நிலையிலான ஆறாவது சுற்றுப் பேச்சுக்களை ரத்துச் செய்திருப்பதாக இந்தியா நேற்று அறிவித்தது.

இப்பேச்சுக்கள் எதிர்வரும் திங்கட்கிழமை புதுடில்லியில் ஆரம்பமாகவிருந்தன.

இஸ்லாமபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் பணிபுரிந்து வந்த சிரேஷ்ட இந்திய ராஜதந்திரி ராஜேஸ்வர் மித்தலை பாகிஸ்தானிய உளவு நிறுவத்தினர் கைது செய்து, சித்திரவதை செய்த சம்பவம், வெளியுறவு செயலாளர் நிலையிலான பேச்சுக்களை நடத்துவதற்கான சூழ்நிலையைக் கெடுத்து விட்டதாகவும் இந்தியா அறிவித்துள்ளது.

## மித்தலை அழைத்து வர இந்திய அரசு ஏற்பாடு

பாகிஸ்தானில் சித்திரவதைக்கு உள்ளானதாகக் கருதப்படும் இந்திய ராஜதந்திரி ராஜேஸ்வர் மித்தலை விசேட விமானத்தில் புதுடில்லிக்கு அழைத்து வர இந்திய அரசு ஏற்பாடு செய்துள்ளது


இதற்காக தனி விமானம் ஒன்று வைத்திய அதிகாரிகள் குழு ஒன்றுடன் இஸ்லாமபாத் சென்று இறங்க பாகிஸ்தானிடம் இந்தியா அனுமதி கோரியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [உ-எ]


## வெற்றுப்போத்தல், மூடி கொள்வனவு

வெற்றுப் போத்தல்கள், சாராயப் போத்தல் மூடிகள் சேகரித்து விற்பனை செய்பவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

வடமாகாண தெங்கு பனம்பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாச,
சந்தைப்படுத்தும் பகுதி,
222, அர்ச்சுனா வீதி, (ஸ்ரான்லி வீதி)
(சி/2359) யாழ்ப்பாணம்.


## 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு : 08-04-1931

உதிர்வு : 27-04-1992

அமரர் இளையதம்பி சின்னத்தம்பி
(ஐயாத்துரை)

அன்பான பப்பாவே! பண்புடன் எம்மை வளர்த்து விட்டு, கடமைகள் செய்யுமுன்னே இறைவனடி சேர்ந்து விட்டீர்.

பப்பா! உங்கள் ஆத்மா சாந்தியடைய இதயம் நெகிழ்ந்து இறைவனை இறைஞ்சுகின்றோம்.

சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி. மனைவி, பிள்ளைகள்.

[21146]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் இளை நூலகம்
யாழ்ப்பாணம்

# தெரிவுக் குழுவை மீண்டும் கூட்ட சபாநாயகர் முயற்சி

கொழும்பு, மே 27

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக் குழுவை மீண்டும் கூட்ட சபாநாயகர் எம். எச். முஹம்மது முயற்சி எடுத்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகின்றது

தெரிவுக் குழுவின் தலைவரும் களுத்துறை மாவட்ட சுதந்திரக்கட்சி எம். பியுமான திரு. மங்கள முனசிங்காவை இது தொடர்பாக சபாநாயகர் தமது அலுவலகத்துக்கு அழைத்துப் பேசினார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன

எதிர்க்கட்சிகளின் பகிஷ்கரிப்பைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தெரிவுக்குழு செயல்படுவது தடைப்பட்டுள்ளது தெரிந்ததே [ஒ-எ]

## ராஜீவ் கொலை வழக்கு

# விசாரணையை ஆங்கிலத்தில் பதிவு செய்ய உத்தரவு

சென்னை, மே 27

ராஜீவ் காந்தி கொலை வழக்கு விசாரணைகளை ஆங்கிலத்தில் பதிவு செய்யும்படி சிறப்பு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழ்நாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் தமிழ்மொழியிலேயே பதிவு செய்யப்பட வேண்டும் என்று சட்டம் உள்ளது.

ஆனால் ராஜீவ் காந்தி கொலை வழக்கு உலக முக்கியத்துவம் பெற்றிருப்பதாலும், இவ் வழக்கு விசாரணைகள் உயர் நீதிமன்றம் வரை செல்லவேண்டியிருப்பதாலும் வழக்கு விசாரணையை ஆங்கிலத்தில் பதிவு செய்ய வேண்டி உள்ளதாக நீதிமன்ற அதிகாரிகள் தெரிவித்தனர். [ஒ-எ]

# ஓமானில் நிர்க்கதியான 51 பெண்கள் நாடு திரும்பினர்

## இன்னும் 250 பேர் அங்கு தவிப்பு

கொழும்பு, மே 27

ஓமான் நாட்டில் நிர்க்கதிக்குள்ளான முந்நூறு இலங்கைப் பெண்களில் 51 பேர் கொண்ட குழு ஒன்று கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பியது. எஞ்சிய பெண்களையும் கொழும்புக்கு அனுப்பி வைப்பதற்கு ஓமானில் உள்ள இலங்கைத் தூதரகம் ஏற்பாடு செய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரண்டு இலங்கை தொழில் ஏஜண்டுகளும் ஓர் இந்திய ஏஜண்டும் இப் பெண்களை தொழில் வாய்ப்புப் பெற்றுத் தருவதாகக் கூறி ஓமானுக்கு அனுப்பிவைத்தனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஓமானில் உள்ள தொழிற்சாலை ஒன்றில் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு அனுப்பப்படுவதாக அப் பெண்களுக்கு ஏஜண்டுகள் தெரிவித்தனர் என்றும் —

ஓமான் சென்று இறங்கி அத தொழிற்சாலையில் 2 மாதங்கள் வேலை செய்த பின்னர்தான் 2 மாதகால உல்லாசப்பயண வீஸாவில் தாங்கள் அனுப்பப்பட்ட விஷயம் அப் பெண்களுக்குத் தெரிய வந்ததாம் [உ-எ]

## 18 மாணவர்கள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 27

புதிய மாணவர்களை ராகிங் செய்தது, கலைப்பீட பீடாதிபதியையும் மூன்று பேராசிரியர்களையும் மற்றும் பிரதம பாதுகாப்பு அதிகாரியையும் கடந்த மாதம் நான்கு மணி நேரம் தடுத்து வைத்திருந்தது ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் பேராதனைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த 18 மாணவர்கள் காலவரையின்றி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இடைநிறுத்தம் செய்யப்பட்ட மாணவர்களில் இருவர் பௌத்த பிக்குகள் ஆவர். [உ-எ]

## கிறாஸ்கொப்பர்ஸ் சாம்பியனானது

யாழ்ப்பாணம், மே 27

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்பட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் அணி சாம்பியனானது.

கடந்த ஞாயிறன்று மாலை கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் கிறாஸ்கொப்பர்ஸ் அணி யாழ். பல்கலைக்கழக அணியை 37 - 29 என்ற புள்ளிக் கணக்கில் தோற்கடித்தது.

அதற்கு முன்னர் மூன்றாவது இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக நடைபெற்ற ஆட்டத்தில் சென். அந்தனீஸ் அணி நவாலி முரசொலி அணியை 37 – 10 என்ற புள்ளி வித்தியாசத்தில் தோற்கடித்தது [உ]

## பல்கலைக்கழக கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டி

யாழ்ப்பாணம், மே 27

யாழ். பல்கலைக்கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டிகள் ஜூன் 8 ஆம் திகதி ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது. [இ]

## விபத்தில் காயம்

கண்டி வீதியில் கடந்த ஞாயிறன்று இடம் பெற்ற இரு வீதி விபத்துக்களில் இருவர் பலத்த காயம் அடைந்தனர்.

கண்டி வீதி— புத்தூர் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்—சைக்கிள் விபத்தில் அச்செழுவைச் சேர்ந்த ஒருவரும் —

மிருசுவிலில் இடம் பெற்ற மோட்டார் சைக்கிள் — சைக்கிள் விபத்தில் தவசிக்குளத்தைச் சேர்ந்த ஒருவரும் காயமடைந்துள்ளனர். [இ-117]

# நெல் கொள்வனவுக்கான கடன் மத்திய வங்கியினால் நிறுத்தம்

## சந்தைப்படுத்தும் சபை திண்டாட்டம்

கொழும்பு, மே 27

நெல் கொள்வனவு செய்வதற்காக நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கி வந்த கடன் வசதிகளை மத்திய வங்கி நிறுத்தி விட்டதாக அறிவிக்கப்படுகின்றது

இனிமேல் விவசாயிகளிடம் இருந்து உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் நெல்லைக் கொள்வனவு செய்வதற்குத் தேவையான நிதியை வர்த்தக வங்கிகளிடம் இருந்தே நெல் சந்தைப்படுத்தும் சபை 17 சதவீத வட்டியில் பெற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் சபையின் நெல் கொள்வனவு நடவடிக்கைகளில் மந்தநிலை ஏற்படும் என்றும் —

நெல் கொள்வனவில் ஈடுபடும் தனியார் வர்த்தகர்கள் பாடு ''கொண்டாட்டமாக'' இருக்கும் என்றும் சொல்லப்படுகின்றது. [ஒ-எ]

## மழையினால் குளங்கள் நிரம்பின

யாழ்ப்பாணம் மே 27

கடந்த வாரங்களில் பெய்த மழை காரணமாக கிளிநொச்சிப் பகுதியிலுள்ள சிறிய குளங்களில் கணிசமான அளவு நீர் நிரம்பியுள்ளது இதனால், இக்குளங்களின் கீழ் உள்ள பகுதிகளில் கூடுதலான நிலப்பரப்பில் பயிர்ச்செய்கையை மேற்கொள்ள தமிழீழ ஆய்வு நிறுவனம் திட்டமிட்டுள்ளது. [இ]

# தி.மு.கவுக்கு தடை வராது! அமைச்சர் ஜேக்கப் தகவல்

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு ஆதரவளிப்பதற்காக தடை செய்யப்படவேண்டிய அமைப்புகளின் பெயர்கள் உள்ள பட்டியலில் தி. மு. கவின் பெயரும் உண்டா?

செய்தியாளர் ஒருவரின் இக் கேள்விக்கு —

''இல்லை தி. மு. க. பொறுப்பான ஓர் அரசியல் கட்சியாகும்'' — என்று இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் பதிலளித்தார்.

திருவனந்தபுரத்தில் 'செய்தியாளர் சந்திப்பு' நிகழ்ச்சியில் கலந்து கொண்ட இணை அமைச்சர் —

''இலங்கைத் தமிழ் அகதிகளைச் சிரமத்துக்குள்ளாக்கும் எந்த நடவடிக்கையையும் இந்திய அரசு எடுக்காது. அவர்கள் இந்தியாவின் மதிப்புக்குரிய விருந்தாளிகளாவர். அவர்களுக்கு உணவு. தங்குமிடவசதிகள் மற்றும் அவர்களின் குழந்தைகளுக்கு கல்வி வசதி ஆகியனவற்றை மத்திய அரசு வழங்கி வரும்'' — என்று சொன்னார்.

விடுதலைப் புலிகளுக்குப் பகிரங்கமாக ஆதரவளித்து வரும் பாட்டாளி மக்கள் கட்சி தடை செய்யப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளிக்கையில் —

''அக் கட்சிக்குத் தடை விதிக்கப்படலாம்'' — என்றும் அவர் சொன்னார். [உ-எ]

# டீஸல் விலை உயரும்?

கொழும்பு, மே 27

டீஸலின் விலையை மேலும் உயர்த்த பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு ஆண்டு தோறும் ஏற்பட்டு வரும் நட்டத்தை இனியும் ஈடுசெய்யப்போவதில்லை என்று திறைசேரி அறிவித்துள்ளதாகவும் —

இதனால் ஏற்படவுள்ள தாக்கத்தைச் சமாளிப்பதற்காக கூட்டுத்தாபனம் தனக்குச் சொந்தமான சுமார் 200 எரிபொருள் நிரப்பும் நிலையங்களை விற்பனை செய்யவும் —

டீஸலின் விலையை மேலும் உயர்த்தவும் தீர்மானித்திருப்பதாக அறியவருகிறது.

உ
சிவமயம்

★ திருமண அழைப்பு ★

நிகழும் ஆங்கிரச வருடம் வைகாசித் திங்கள் 15 ஆம் நாள் [28-05-1992]
வியாழக்கிழமை முற்பகல் 10-04 முதல் 11 - 12 வரையுள்ள
★ கடக லக்கின சுப முகூர்த்த வேளையில் ★

திருவளர் செல்வன்
நவநீதகாந்தன்
(சந்திரன்)
(லிங்கம் ஸ்ரோர்ஸ் உரிமையாளர், வண்ணார்பண்ணை)
அவர்களுக்கும்

திருவளர் செல்வி
திருமகள்
(சாந்தி)
(ஆசிரியை, யா/ஊர்காவற்றுறை புனித மரியாள் பெண்கள் பாடசாலை)
அவர்களுக்கும்

திருவருள் துணை கொண்டு அரியாலை ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி
க. இராசலிங்கம் குடும்பத்தினர்,
14, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
இ. சபாரத்தினம் குடும்பத்தினர்,
சரவணை மேற்கு, வேலணை,
77/9, A. V. றோட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

குறிப்பு: சிறப்பு வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் 30-05-1992 சனி பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும்.

[21136]

BITSMANS
கல்வி நிறுவனம்,
மானிப்பாய்.

பிரிவு-3 92 O/L

DAY CLASS

(முழுப்பகல் நேர வகுப்புகள்)

எமது வழமையான "Super Grade"
ஆசிரிய குழுவினால்

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | J. R. குரி |
| கணிதம் | — | இரா. அருட்செல்வம் |
| தமிழ் | — | பாலா |
| ஆங்கிலம் | — | M. A. ஹரி |
| சமூகக்கல்வி, வர்த்தகம் | — | ராஜன் |
| சமயம் | — | கணேஸ் |
| விவசாயம் | — | சிவராஜா |

ஆரம்பம்: 28 - 05 - 1992
வியாழன் காலை 8 00 மணி

(விண்ணப்பங்களை முன்கூட்டியே பதிவு செய்யவும்)

[சி-2613]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

Hy-Line Golden Comet கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு. நா. ஸ்ரீகாந்தன், C/o N. R. வீரவாகு, கொக்குவில் மேற்கு, கொக்குவில். [21122]

தரமான வீட்டுத் தளபாடங்கள், பீங்கான் வகைகள், அழகு படுத்தும் பொருள்கள் குசினிச் சாமான்கள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தேவையான பொருள்களை எழுத்து மூலம் விண்ணப்பித்து நேரில் பெற்றுக் கொள்ள தொடர்பு கொள்ளவும். இல: 414, C/o உதயன். [21133]

## சிரட்டைகள் தேவை

தொகையாக சிரட்டைகள் எம்மால் கொள்முதல் செய்யப்படும். ஒரு சோடி -/75 சதம். தரமான சிரட்டைகளாக இருத்தல் வேண்டும். ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம். இல. 58, நல்லூர் குறுக்குத் தெரு. நல்லூர், யாழ்ப்பாணம். [21096]

## இலவச திருமண சேவை

34 வயது. பூராடம், செவ்வாய் - 1, நெதர்லாந்தில் தொழில் புரிபவருக்கும், 32 வயது, ரோகிணி, செவ்வாய் 7, கொழும்பில் உதவிக் கணக்காளருக்கும் மணமக்கள் தேவை து. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4889]

34 வயது ஆசிரியைக்கும், 37 வயது ஆண் பொறியியலாளருக்கும் தகுந்த மணமக்கள் தேவை. மாற்றுச் சம்பந்தமும் கவனிக்கப்படும். தொடர்பு: ஞாயிறு காலையில். து விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. [4891]

## மணமக்கள் தேவை

யாழ். இந்து, 39 வயது, பூரம் - 2, செவ்வாய் -4 பயிற்றப்பட்ட ஆசிரியைக்கு மணமகனும், 37 வயது, பரணி 4, செவ்வாய் 12 கணக்காளருக்கு மணமகளும் தேவை. மாற்றுச் சம்பந்தமும் செய்யலாம். இலக்கம்: 844, மே/பா உதயன். [4885]

## மணமகன் தேவை

சாவகச்சேரி, இந்து, பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியை வயது 37, நட்சத்திரம் உத்தராடம், 1ஆம் பாதம், செவ்வாய்க் குற்றமற்றவர். அரச கூட்டுத்தாபன ஊழியர், தனி முதலீட்டாளர் தென்மராட்சிப் பகுதியில் விரும்பத்தக்கது சீதனம் வீட்டுடன் கொடுக்கப்படும். குமாரசாமி, காளி கோவிலடி, டச்சு வீதி, சாவகச்சேரி வடக்கு. [21141]

## சோதிடம்

ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் பார்க்க தொடர்பு: நேரம் தினமும் பிற்பகல் 2-00 மணி முதல், மாலை 7-00 மணி வரை. த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 249 (311), நாவலர் வீதி, யாழ்ப்பாணம். கிளை: 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. தினமும் காலை 7-00 — 12-00 வரை. [21118]

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்: 08-04-1924



மறைவு: 28-04-1992

## சிற்றம்பலம் ஈசுரபாதம்

[ஓய்வு பெற்ற தபாலதிபர்]

திதி: 27—05—19•2

அப்பா! அன்புள்ள அப்பா!!
நீங்கள் இருக்கின்றீர்கள் என்று நாம் எண்ணி இருக்க,
நாளை ஐயா வருவார் என
நண்பர்கள் காத்திருக்க
அமைதியாக நீண்ட துயில்
கொண்டீர்களா அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். அப்பாவின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றி, பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி அறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

620, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். [21072]

# உதவும் கரங்கள் செஷயர் இல்லம்

மேற்படி விடுதியில் வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அங்கவீனர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

நிபந்தனைகள்:-

1. 16 வயதிற்கு மேற்பட்ட ஆண்களாக இருத்தல் வேண்டும்.
2. சிறு உதவியுடன் அல்லது மூன்று சில்லு சைக்கிளின் உதவியுடன் தன்னை நகர்த்திக் கொள்ளக் கூடியவராக இருத்தல் வேண்டும்.
3. படுக்கையில் இருக்க வேண்டிய நோயாளிகள் அனுமதிக்கப்படார்.
4. விடுதியில் அளிக்கப்படும் தொழிற் பயிற்சியில் முழுமையாக பங்கு கொள்ளல் வேண்டும்.
5. விண்ணப்பங்கள் 25-06-92க்குப் பிந்தாமல் நிலையத்தில், தலைவர், டாக்டர் வி. யோகநாதன், இல. 178, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு கிடைக்க வேண்டும்.
6. மேலதிக விவரங்களை விடுதிப் பொறுப்பாளரிடமிருந்து அறிந்து கொள்ளலாம்.

வே. யோகநாதன்,
தலைவர்.

கில்னர் பில்டிங்ஸ்,
கே. கே. எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
25-05-1992 [21185]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 03 — 04 — 1930



மறைவு: 27 — 05 — 1987

## அமரர் அருளம்பலம் முத்துராஜா

[முன்னாள் உபதபால் அதிபர், தொண்டமனாறு]

திதி: 31—5—1992

எங்கள் குடும்பத்தின் தலைவராக இருந்து, எமக்கு நல்வழி காட்டிய உங்கள் நினைவலைகள் என்றும் எம் மனதை விட்டகலா. உங்கள் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவியும், பிள்ளைகளும்.

கெருடாவில்,
தொண்டமனாறு [4899]

# எட்டாம் ஆண்டு பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்கள்



**கந்தப்பு ஸ்ரீபன் தேவராசா (தேவா)**
மலர்வு: 22 — 08 — 1946
உதிர்வு: 27 — 05 — 1984

**கந்தப்பு ஸ்ரீபன் ஞானராசா (ஞானி)**
மலர்வு: 09 — 08 — 1955
உதிர்வு: 29 — 05 — 1982

என் இரு கண்ணின் விழிகளே!
உங்கள் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

- உங்கள் அம்மா.

கென்ஸ்மன் ஒழுங்கை,
சாவகச்சேரி. [4879]

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 — 02 — 1966



மறைவு: 27 — 05 — 1987

## அழகையா பிறேமகுலசிங்கம்

(பிறை)

திதி: 01 — 06 — 1992

ஐந்து ஆண்டுகள் ஆனாலும்
ஆறுதல் சொல்லிட யாருமில்லை
எம் நெஞ்சங்கள் உன்னை மறக்கவில்லை
எம் துயர் யார் அறிவார்.
அன்பின் பிறப்பிடமாய் திகழ்ந்த
பிறேமகுலசிங்கம் பிறையே!
உன் ஆத்ம சாந்திக்கு
இறைவனை பிரார்த்திக்கிறோம்.

- குடும்பத்தினர்.

கொம்பந்தறை,
வல்வெட்டித்துறை, [21123]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் கிளை நூலகம்
மாநகர ...ம்
யாழ்ப்பாணம்

## உதயன்

### அவர் சொல்வது உண்மை

மனித உரிமைகள் விடயத்தில் முன்னேற்றம் காண்பதற்கு ஸ்ரீலங்கா இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது. இதுவரையில் சிறிதளவு முன்னேற்றமே காணப்பட்டுள்ளது.

இவ்வாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சின் உதவிச் செயலாளரான திருமதி ஷாபர் சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமைகளைப் பேணும் புதிய முயற்சிகள் தொடர்பாக திருமதி ஷபாரின் அறிக்கை உண்மையைக் கூறுவதாக உள்ளது.

மனித உரிமைகள் பேணுதலை, நிதி உதவி, கடன் வழங்குவதற்கான நிபந்தனையாக மேற்கத்திய நாடுகள் என்று கைக்கொள்ளத் தொடங்கினவோ அன்று தான் ஸ்ரீலங்கா அது பற்றிச் சிந்திக்கத் தொடங்கியது; கருத்தில் கொண்டுள்ளதாகக் காட்டிக்கொள்ள ஆரம்பித்தது.

அதற்கு முன்பதாக—

மக்களின் மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள் பேணப்படும் என்று அரசமைப்புச் சட்டம் கூறியபோதிலும், நடைமுறையில் அரச நிர்வாக இயந்திரங்களாலும், படைகளாலும் மனித உரிமைகள் நூற்றுக்கு நூறு வீதம் மீறப்பட்டு வந்தன. அவற்றுக்குத் துணைபோகும் விதத்தில், உதவிடும் வகையில் சட்டங்கள் கூட அமுல் செய்யப்பட்டன!

தமிழர்களின் விடுதலை போராட்டத்துக்குப் பயங்கரவாதம் என்று பெயரிட்டு, அதனை அடக்குவதாகக் கூறிக் கொண்டு தமிழ் மக்களுக்குரிய மனித உரிமைகள் கண்மூடித்தனமான முறையில் மீறப்பட்டன. (தெற்கில் மனித உரிமைகள் பேணப்பட்டதாகக் கருதிக் கொள்ளலாகாது.) மீறல்கள் உச்சக் கட்டத்தை அடைந்த பின்னரே மேற்கு நாடுகள் கண் விழித்தன.

ஆனால் ஒன்று. மேற்கு நாடுகள் மனித உரிமைகளை முற்றாகப் பேணி வருவதாகச் சொல்ல முடியாது. எனினும் மனித உரிமைகளை நிதி உதவியுடன் தொடர்புபடுத்தி மூன்றாம் உலக நாடுகளை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கவே மேலை நாடுகள் இவ்வாறு நிபந்தனை போடுகின்றன என்பது விவகாரத்தின் அடுத்த பக்கம்.

மேற்கு நாடுகள் நிபந்தனை விதிக்கத் தொடங்கியதும் மனித உரிமைகள் ஆணைக்குழு, படையினர் செய்யும் படுகொலைகளுக்கு விசாரணைக் குழுக்கள், காணமற் போனோர் பற்றிய தகவல்களைச் சேகரிக்கக் குழு என்று அரசு பம்மாத்துக் காட்டத் தொடங்கிற்று.

அந்தப் பம்மாத்தில் பல வெளிநாடுகள் ஏமாந்து போனதை அவை சமீப காலமாக வெளியிட்ட அறிக்கைகள் புலப்படுத்துகின்றன. கனடா, பிரிட்டன், ஜப்பான் ஆகிய நாடுகள் அந்த வரிசையில் சேர்ந்து கொண்டன. குறிப்பாக சர்வதேச மன்னிப்புச் சபையின் 32 நிபந்தனைகளில் 24 நிபந்தனைகளை ஸ்ரீலங்கா அரசு ஏற்றுக் கொண்டதாகக் கூறியதும் வெளிநாடுகள் திருப்தி அடைந்து விட்டன.

உண்மை அதுவல்ல. திருமதி ஷாபர் சொல்வதே சரியான நிலையாகும். இதனை உலக நாடுகள் நன்றாகப் புரிந்து கொள்ளவேண்டும்.

# மனித உரிமை பேணுவதில் சிறிதளவே முன்னேற்றம்

## இலங்கை நிலை பற்றி அமெ. புதிய தூதர் அறிக்கை

கொழும்பு, மே 27

இலங்கையில் மனித உரிமை பேணும் விஷயத்தில் முன்னேற்றம் காண வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது.

இலங்கைக்கான அடுத்த புதிய அமெரிக்கத் தூதர் திருமதி ஷாபர், அமெரிக்க வெளியுறவு அமைச்சுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கை ஒன்றில் முன் கண்டவாறு தெரிவித்திருக்கின்றார்.

திருமதி ஷாபர் அமெரிக்க வெளியுறவு அமைச்சில் பிரதி உதவிச் செயலாளராகத் தற்போது பதவி வகித்து வருகின்றார்.

இலங்கையில் மனித உரிமை பேணும் விஷயம் பற்றி அவர் சமர்ப்பித்த அறிக்கையில்—

இலங்கையில் மனித உரிமைகள் நிலைவரத்தில் சிறிதளவே முன்னேற்றம் காணப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். [இ-எ]

### வைத்தீஸ்வரவில் விபுலாநந்தர் நூற்றாண்டு விழா

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமை காலை 9 30 மணிக்கு வைத்தீஸ்வரக் கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடைபெறுகின்றது.

விழாவில் சொற்பொழிவுகளும், கருத்தரங்கும், மாணவர் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற உள்ளன.

வைத்தீஸ்வரக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையின் ஆதரவில் இவ் விழா நடைபெறுகிறது. [இ]

### கச்சாயில் நூல் வெளியீட்டு விழா

கச்சாயூர்க் கவிஞரும், பண்டிதரும் பாடசாலை அதிபருமான சுக - சீவரத்தினத்தின "பத்துக் கவிதைகள்" நூல் வெளியீட்டு விழா. அண்மையில் அருள்மிகு கச்சாயூர் ஒட்டங்கேணிப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்றது.

மணி ஐயர் நூலை வெளியிட்டு வைத்தார்.

ஓய்வு பெற்ற கிராம சேவகா திரு சி. அம்பலவாணபிள்ளை நூலாய்வு செய்தார்.

பாடல்களை பலரும் இசையுடன் பாடி விழாவைச் சிறப்பித்தனர்.

இறுதியில் நூலாசிரியர் நன்றி தெரிவித்து உரையாற்றினார். (இ)

### ஜி.சீ.ஈ.(உ.த.) விசேட பரீட்சை:

## விடைத்தாள்களை திருத்தும் வேலை இரு நிலையங்களில்

கொழும்பு, மே 27

கடந்த ஏப்ரல் மாதம் வடக்கில் நடைபெற்ற ஜி சீ. ஈ [உயர்தரம்] விசேட பரீட்சையின் வினாத்தாள்களைத் திருத்தும் வேலைகள் ஆரம்பமாகி உள்ளன.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும், கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியிலும் விடைத்தாள்கள் திருத்தும் வேலைகள் நடைபெறும்.

விடைத்தாள் திருத்தும் வேலைகளுக்காக பிரஸ்தாப இருபாடசாலைகளும் இன்று 27 ஆம் திகதி தொடக்கம் ஜூன் 9 ஆம் திகதி வரை மூடப்பட்டிருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது .[இ-த)

# எழுச்சிமிக்க தமிழினத்தை கட்டி வளர்க்க முன் வருக!

## கலைஞர்களுக்கு யோகி அழைப்பு

யாழ்ப்பாணம், மே 27

தமிழீழத்தில் வாழும் கலைஞர்கள் அனைவரும் தமது தனிப்பட்ட கௌரவங்களையும், அந்தஸ்தையும் மறந்து ஓர் எழுச்சிமிக்க சுதந்திர தமிழீழத்தைக் கட்டி வளர்க்க முன்வர வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் திரு. யோகரத்தினம் யோகி.

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆறாவது வெளியீடான "விடியலின் பாடல்கள்" ஒலிப்பதிவு நாடா வெளியீட்டு வைபவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

அந்த வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே திரு. யோகி முன்கண்டவாறு சொன்னார்.

அவர் மேலும் பேசுகையில் இந்தியாவோ அல்லது இலங்கை இராணுவமோ தலைவர் பிரபாகரனை பிடிப்பதென்பது நடக்காத காரியம். நாங்கள் அடிமையாகும் தலைமையைக் கொண்ட கூலிப்படைகள் அல்ல.

எமது போராட்டத்தில் நாம் சந்தித்த வேதனைகளும், சோதனைகளும் அனைத்து வரலாற்று நிகழ்வுகளும் இலக்கியங்களே.

தமிழினத்துக்கும், உலகத்துக்கும் இன்னும் ஐயாயிரம் வருடங்களுக்குப் பின்னும் அவை வழிகாட்டும் என்றார்.

திரு. இளம்பரிதி தலைமையில் நடந்த வெளியீட்டு வைபவத்தில் "விடியலின் பாடல்கள்" ஒலிப்பதிவு நாடாவை உருவாக்கிய கலைஞர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், கவிஞர் சோ. பத்மநாதன், மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி ஜெயா ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்.

கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை வெளியீட்டுரை நிகழ்த்தினார். [இ-5]

### உலகச் செய்திகள்

#### பங்களாதேஷ் பிரதமர் டில்லியில்

புதுடில்லி, மே 27

பங்களாதேஷ் பிரதமர் பேகம் காலி தாஸியா நேற்றுக் காலை புதுடில்லிக்கு விஜயம் செய்தார். பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் பேகம் ஸியா இந்தியாவுக்கு விஜயம் செய்திருப்பது இதுவே முதல் தடவையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

தமது மூன்று நாள் விஜயத்தின்போது இரு தரப்புப் பிரச்சினைகள் பற்றி இந்தியப் பிரதமருடன் பேகம் காலிதா பேச்சுகள் நடத்துவார். [இ-எ]

#### மண்டேலா கோரிக்கை

கேப்டவுண், மே 27

தென் ஆபிரிக்காவில் பல இனத்தவர்கள் பங்கு கொள்ளும் அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்கு இப்போதுள்ள ஆட்சியினர் இணக்கம் தெரிவிக்கும்வரை அந்த நாட்டுக்கு எதிரான பொருளாதாரத் தடை நடவடிக்கை தொடர்ந்து அமுல் செய்யப்பட வேண்டும்.

இவ்வாறு ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா கோரிக்கை விடுத்துள்ளார். [இ-எ)

#### போரை முடிக்க அணு ஆயுதம்

பாரிஸ். மே 27

ஒரு போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக அணு ஆயுதங்களின் உபயோகத்தை அனுமதிக்க வகை செய்யும் புதிய தோர் உத்தியை நேட்டோ இராணுவக் கூட்டான வட அத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம் தயாரித்து இருப்பதாக அறிவிக்கப்படுகிறது. [இ-எ]

## சந்தை விலைகள் (25-05-92 ஆம் திகதியன்று)

| பொருள்கள் [கி. கிராம்] | திருநெல்வேலி | யாழ். பெரிய கடை | சுன்னாகம் | பண்டத்தரிப்பு | அச்சுவேலி | பருத்தித்துறை | கொடிகாமம் |
|---|---|---|---|---|---|---|---|
| குத்தரிசி | 23-00 | 23-00 | 25-00 | 23-00 | 22-00 | 25-00 | 24-00 |
| கோதுமை மா | 12-50 | 13-00 | 13-50 | 12-00 | 13-00 | 12-50 | 13-00 |
| சீனி | 32-50 | 32-50 | 32-00 | 33-00 | 33-00 | 33-00 | 34-00 |
| உழுந்து | 45 00 | 45-00 | 48-00 | 42-00 | — | 47-00 | 48-00 |
| பயறு | 30-00 | 25-00 | 32-00 | 22-00 | 28-00 | 30-00 | 30-00 |
| கௌபி | 25-00 | 25-00 | 28-00 | 24-00 | 25-00 | 25-00 | 25 00 |
| செ. மிளகாய் | 72-00 | 80-00 | 75-00 | 65-00 | 80-00 | 78-00 | 70-00 |
| தக்காளி | 35-00 | — | — | 25-00 | — | — | — |
| கத்தரி | 16-00 | 20-00 | 15-00 | 10-00 | 20-00 | 8-00 | 10-00 |
| வெண்டி | 18-00 | 18-00 | 12-00 | 8 00 | — | 10-00 | 16 00 |
| பாகல் | 27 00 | 32-00 | 35-00 | 24-00 | — | 18-00 | 35-00 |
| புடோல் | 12-00 | 14-00 | 12-00 | 6-00 | 14-00 | 21-00 | 10-00 |
| பயிற்றங்காய் | 12 00 | 18-00 | 18-00 | 20-00 | 18-00 | 10-00 | 6-00 |
| கோவா | — | — | — | 4-00 | — | 6-00 | 8-00 |
| கரட் | 20-00 | 28-00 | 22-00 | 7-00 | 20-00 | 19-00 | 24-00 |
| பீற்றூட் | 7-00 | 12-00 | 7-00 | 7-00 | 5-00 | 6-00 | 10-00 |
| வாழைக்காய் | 15-00 | 20-00 | 20 00 | 35-00 | 18-00 | 20-00 | 20-00 |
| ப. மிளகாய் | 43-00 | 40-00 | 40-00 | 50-00 | 50-00 | 43-00 | 32-00 |
| வெங்காயம் | 20-00 | 16-00 | 16-00 | 15-00 | 16-00 | 20-00 | 16-00 |
| தேங்காய் | 12-00 | 18-00 | 15-00 | 14-00 | 18-00 | 14-00 | 13-00 |
| வாழைப்பழம் (கதலி) | 14-00 | 18-00 | 15-00 | 12-00 | 10-00 | 16-00 | 20-00 |
| பெரிய மீன் | 150-00 | 100-00 | 60-00 | — | — | 110-00 | — |
| சிறிய மீன் | 120-00 | 40-00 | 90-00 | — | — | 25-00 | — |
| முட்டை | 7-50 | 7-00 | — | 7-50 | 7-00 | 8-50 | 5-00 |
| மண்ணெண்ணெய் [லீற்றர்] | 23-00 | 24-00 | 25-00 | 26-00 | 25-00 | 25-00 | 26-00 |

தகவல்: தமிழீழ ஆய்வு நிறுவனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திரு. சிவலிங்கம் தியாகலிங்கம்

[களஞ்சியப் பொறுப்பாளர், யாழ். தனியார் வைத்தியசாலைகள், ஆனைப்பந்தி]

கொழும்புத்துறை மேற்கைச் சேர்ந்த சந்திரா என அன்பாக அழைக்கப்படும் சிவலிங்கம் தியாகலிங்கம் அவர்கள் 25-05-1992 அன்று காலமானார்.

அன்னார் திருமதி மகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சிவலிங்கம் - நீலாவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற சரவணபவானந்தர் - தெய்வானைப்பிள்ளை அவர்களின் அன்பு மருமகனும், பிரசாந் [யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்], நிவேதினி [யாழ். சுண்டுக்குளி, மகளிர் கல்லூரி மாணவி], கிருஷாந் [யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரி மாணவன்] ஆகியோரின் அன்புத் தந்தையும், இராஜலிங்கத்தின் [ஜனவசம, புத்தளம்] சகோதரரும், காலஞ்சென்ற நடராஜாவின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியை இன்று புதன்கிழமை [27-05-92] மாலை 4.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக துண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

90, கொழும்புத்துறை வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.
[21148]

## திருமதி வேலுப்பிள்ளை குஞ்சிப்பிள்ளை

யாழ்ப்பாணம், 7/2, பிறவுண் வீதி, முதலாம் ஒழுங்கையை வசிப்பிடமாகக் கொண்ட திருமதி வேலுப்பிள்ளை - குஞ்சிப்பிள்ளை நேற்று [26-5-92] காலை காலமானார்.

இவர் காலஞ்சென்ற நாகநாதர் வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் புவனேஸ்வரி, பராசக்தி, சீதாலட்சுமி [ஓய்வுபெற்ற ஆசிரியை யா / சன்மார்க்க வித்தியாசாலை] பவளேஸ்வரி, நகுலேஸ்வரி, மங்களேஸ்வரி, விமலநாதன் [மாமா] ஆகியோரின் அன்புத் தாயாரும், நடராசா, துரையப்பா, சுப்பிரமணியசிவம், மாணிக்கராசா, தனபாலன், கணேசமூர்த்தி சாரதாதேவி ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [27-5-92] புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
7/2 பிறவுண் வீதி,
முதலாம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

வேலுப்பிள்ளை - விமலநாதன்
[மகன்]
[21144]

## நாகலிங்கம் சேனாதிராசா
(தியாகராசா)

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டம் வீதியைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி சைவப்பாடசாலை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சேனாதிராசா அவர்கள் 25-5-92 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
நித்தியானந்தன்
[மைத்துனர்]

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
(21147)

## திருமதி அப்புத்துரை செல்லமுத்து

திருமதி அப்புத்துரை செல்லமுத்து சிவபதமடைந்து விட்டார். அன்னார் சூளானை சுன்னாகத்தை பிறப்பிடமாகக் கொண்டவரும், எல்லுப்போலை அப்புத்துரை [சுன்னாகம், கிராமசபை முன்னாள் உறுப்பினர்] அவர்களின் அருமை மனைவியும், தனலட்சுமி, செல்லச்சாமி [பணியாளர், சுன்னாகம் பட்டினசபை], தங்கவேல், வடிவேல், கதிர்வேல், செல்வநாயகி, ஸ்ரீகாந்தமலர் ஆகியோரின் தாயாரும், சண்முகநாதன், இராமச்சந்திரன் [நீர்வேலைப் பகுதி, யாழ். மாநகரசபை], குகநாதன் [யாழ் மாவட்ட அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம்], பூமணி, அமரத்துவமடைந்த மூளாய் விசாலாட்சி, றஞ்சி, இந்துமதி, கோமதி ஆகியோரின் அருமை மாமியாரும், கனகசபை [முன்னாள் தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்], அமரரான தர்மலிங்கம் [வாழைச்சேனை கடதாசிக் கூட்டுத்தாபன முகாமி] ஆகியோரின் உரிமைச் சோதரியும், சோபனா, மனோகரன், குமரேஸ்வரன், கோகிலன், ராகுலன், சோமாஜினி, சமீனா, நரேஷ், நிராஜினி, பராகுலன் ஆகியோரின் பேத்தியாரும், ஜீவன், காந்திமதி, ராஜன், ஜீவா, கீதா, கவிதா, ரூபா ஆகியோரின் உரிமை மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக, சுன்னாகம் கொத்தியாலடி இந்துமயானத்திற்கு இன்று [27-05-92] புதன்கிழமை, பிற்பகல் 3 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோர் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்;
டாக்டர் சுப்பிரமணியம் வீதி,
[சூளானை] சுன்னாகம். [21149]

ஏ. அப்புத்துரை
[கணவர்]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 27-05-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## இன்று

யாழ்ப்பாணம், மே 27

''இனப்பிரச்சினையை ஆட்சியாளர் கையாண்ட விதமும், அதனால் உப கண்ட அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும்'' என்ற தலைப்பில் திரு. மு. திருநாவுக்கரசு இன்று உரை நிகழ்த்துவார்.

இந்த வைபவம் இன்று புதன் பிற்பகல் 3-00 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதிக் கலையரங்கில் இடம்பெறும்.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவனாகிய சி. பிரபாகரனின் 3 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. [த]

★ ★ ★

யாழ். நவாலி ஸ்ரேஷன் அமெரிக்க மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் பெற்றோர் தின விழாவும் பரிசளிப்பு விழாவும் இன்று காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். [உ-162]

★ ★ ★

யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கத்தின் கொழும்புத்துறை கிளை இன்று நண்பகல் 2மணியளவில் கொழும்புத்துறை வீதி— 2 ஆம் குறுக்குத்தெருச் சந்தியில் இன்று திறந்து வைக்கப்படும். யாழ்ப்பாண ப.நோ.கூ. சங்கத் தலைவர் திரு. எஸ். சிறில் கிளையைத் திறந்து வைப்பார். [உ-126]

★ ★ ★

யாழ் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சகல சிற்றூர்தி உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் முத்திரைச் சந்தியில் உள்ள ஸ்தான பாடசாலையில் நடைபெறும் என தனியார் போக்குவரத்துப் பிரிவு அறிவித்துள்ளது. [உ]

★ ★ ★

சாவகச்சேரி இந்துக் கல்லூரி ஆரம்ப பாடசாலையின் ஆங்கில தினம் இன்று பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி கனிஷ்ட அதிபர் திரு. வை. கயிலேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

விழாவுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்விக்கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. பொ சிவகுருநாதனும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி வடநகர் கொத்தணி அதிபர்திரு க. சந்திரசேகரர், ஆங்கில உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. டீ. ஆர். அருமைநாயகம், ஆங்கில வெளிக்கள நிகழ்ச்சி உதவியாளர் பீ. ஆனந்தமகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்வர். [உ-117]

## கொழும்புக்கு புதிய ஆயர்

கொழும்பு, மே 26

கொழும்பு ஆயராக (Bishop of the Diocese of Colombo) வண. கென்னத் மைக்கல் ஜேம்ஸ் பெர்னாண்டோ கடந்த வியாழக்கிழமை தெரிவு செய்யப்பட்டார்.

எதிர்வரும் ஜூலை மாதம் இளைப்பாறவிருக்கும் அதிமேற்றிராணியார் ஜே. ஜே. ஞானப்பிரகாசத்தின் இடத்துக்கு இவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

டிசம்பர் 1992 இல் வண. பெர்னாண்டோ கொழும்பு மாவட்டத்தின் 13 ஆவது ஆயராகப் பதவி ஏற்கிறார். பதவி ஏற்பு நிகழ்ச்சியில் கன்டர்பரி ஆர்ச்பிஷப்பும் கலந்து கொள்வார்.

கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவரான வண. பெர்னாண்டோ மொரட்டுவையைச் சேர்ந்தவர். [த-எ]

# விபுலாநந்த அடிகளுக்கு மனங்களில் சிலை வையுங்கள்

## நூற்றாண்டு விழாவில் பேச்சு

யாழ்ப்பாணம், மே 27

''விபுலாநந்தருக்கு விழா எடுக்கும் நாம், அவருக்குச் சிலை எழுப்பவேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. அடிகளாருக்கு ஒரு சிலை அல்ல பலலாயிரம் சிலைகள் வைக்கப்படவேண்டும். அந்தச் சிலைகளை எங்கள் மனங்களிலேயே எழுப்ப வேண்டும்.

''விபுலாநந்தரின் இலட்சியங்களைப் புரிந்து கொண்டு, அவர் காட்டிய பாதையில் மனித நேயத்துடன் மக்களுக்குத் தொண்டு செய்வதற்கு எம்மை அர்ப்பணிக்க வேண்டும். இன்றைய காலகட்டத்தில் அதுவே முக்கிய தேவை.''

— இவ்வாறு யாழ். மாநகர சபையின் ஆதரவில் கடந்த மூன்று நாட்களாக நடைபெற்ற விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண்டு விழா இறுதி நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் வண. பிதா பிரான்சிஸ் ஜோசப் அடிகளார் தெரிவித்தார்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவில் அடிகளார் தமது தலைமையுரையில்—

தன்மான உணர்வு உள்ள ஒருவனுக்கே தேசிய உணர்வு பிறக்கும். தேசிய உணர்வு உள்ள ஒருவனாலேயே சமூகத்துக்குப் பயன்தரக்கூடிய— காலத்தால் அழியாத— கருத்துக் கருவூலங்களைப் படைக்க முடியும். தன்மான உணர்வு பிறப்பதற்கு சுதந்திரம் அவசியம். சுதந்திரம் பிறக்க எல்லோரும் பங்கு கொண்டு உழைக்கவேண்டும்— என்றும் தெரிவித்தார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் சிறப்புப் பேருரையும், திரு. சொக்கன் தொடக்கவுரையும் ஆற்றினர்.

கடந்த மூன்று நாள் நிகழ்ச்சிகளிலும், கல்விமான்கள், அறிஞர்கள், தமிழ் ஆர்வலர்கள், விபுலானந்தர் அபிமானிகள் என்று பெருந்திரளானோர். விழாவுக்குச் சமூகமளித்திருந்தனர். [அ]

## நாகபாம்பை தரிசித்த மக்கள்

வண்ணார்பண்ணை, மே 27

மல்லாகம் ரயில் நிலையத்திற்குச் சமீபமாக உள்ள கைவிடப்பட்ட கடை ஒன்றில் தொடர்ந்து படமெடுத்தபடி காணப்படும் நாகபாம்பை பெருந்திரளான மக்கள் நேற்றுத் தரிசித்தனர்.

நாகபாம்பின் கழுத்தின் சங்கு சக்கர வடிவம் தென்படுவதைக் கண்ட மக்கள் மலர் தூவி வணங்கி பாலும் வைத்தனர்.

நேற்றுக் காலை முதல் பகல் முழுவதும் அந்த நாக பாம்பு படமெடுத்தபடி நின்றதை எமது செய்தியாளர் நேரில் பார்த்தார்.

மக்கள் வைத்த பாலைக் குடித்த பாம்பு எவ்வித குண மாற்றமும் இன்றி தொடர்ந்து படம் விரித்தபடி காணப்பட்டது. [அ-162]

## அரசியல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இருப்பதாகத் தெரிய வருகிறது.

தெற்கில் பயங்கரவாதம் நிலவிய சமயத்தில் கிளர்ச்சியாளர்களையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களையும் கொல்வதற்காக ''கறுப்புப் பூனைகள்'' அமைப்பு உருவாக்கப்பட்டது பற்றி உடுகம்பொல இப்படத்தில் தெளிவுபடுத்தி உள்ளார் எனவும் கூறப்படுகிறது.

இதேசமயம் —

பயங்கர நிலை நிலவிய காலகட்டத்தில் நடந்த சம்பவங்கள் பற்றி உடுகம்பொலவினால் எழுதப்பட்ட புத்தகம் ஒன்று தற்போது சிங்கப்பூரில் அச்சிடப்பட்டு வருவதாகவும், அச்சிடும் செலவை அமெரிக்க நிறுவனம் ஒன்று ஏற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது [உ-10]

## யாழ். ஆஸ்பத்திரி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

1 மணித்தியாலம் மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகின்றது.

வழமையாக தினசரி சுமார் 400 எக்ஸ்றே படங்கள் எடுக்கப்பட்டு வந்தன. ஆனால் இப்பொழுது 50 எக்ஸ்றே படங்கள் மட்டுமே எடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிப்புற்றுள்ளனர்.

அதேசமயம், நீர் விநியோகம் மற்றும் ஆய்வு கூட வேலைகள் போன்றவையும் சீர்குலைந்துள்ளன.

ஆஸ்பத்திரிக்கு இம் மாதத்திற்குரிய டீசல் வந்து சேராமையே இந்த நிலைமைக்குக் காரணம் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-15-3)

## பிரேமதாஸாவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கத் தெரியவருகிறது.

ஜனாதிபதி இடம்பெயர் சேவை குழம்பாமல் தடுப்பதற்கும்—

இச்சேவைக் காலத்தில் தமிழர் வவுனியாவுக்குள் வருவதை கட்டுப்படுத்தும் நோக்கத்துடனும்—

அதன் மூலம் சிங்களவர்களுக்கு மட்டும் இடம்பெயர் சேவையின் பயன் கிடைப்பதை உறுதிப்படுத்தும் விதத்திலும் படையினர் கெடுபிடி நடவடிக்கைளைத் தீவிரப்படுத்தியிருக்கின்றனர்.

நகரில் ஆங்காங்கே தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடும் படையினர் அங்கிருந்து அப்பாவித் தமிழர்களைக் கைது செய்து கொண்டு செல்கின்றனர்.

வவுனியா ஊடான, வடக்கிற்கும் கொழும்புக்கும் இடையிலான போக்குவரத்தைக் கட்டுப்படுத்துவதிலும் படையினர் தீவிரமாகவுள்ளனர். குடாநாட்டில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டதற்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்று ஊகம் தெரிவிக்கப்பட்டது.

குடாநாட்டு ஊரடங்கைக் காரணம் காட்டி வவுனியாவிலிருந்து வடக்கிற்கும், வடக்கிலிருந்து வவுனியாவுக்குமான போக்குவரத்தை படையினர் தடுப்பர் என்று நம்பப்படுகிறது.

இதே வேளை —

கொழும்பிலிருந்து வியாபார நோக்கங்களுக்காகச் சென்ற வாகனங்களை கடந்த திங்கள் முதல் வவுனியாவுக்குள் செல்ல படையினர் அனுமதிக்கவில்லை. விசேட அனுமதி பெற்ற வாகனங்கள் மட்டும் வவுனியாவுக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

ஜனாதிபதி இடம்பெயர் சேவைக் காலத்தில் வவுனியா நகருக்குள் பிரவேசிப்போர் தேசிய அடையாள அட்டையை அல்லது பொலீஸாரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தமது படங்களை வைத்திருக்க வேண்டும் என பகிரங்க அறிவிப்பு விடுக்கப்பட்டிருக்கிறது. [உ-எ-3-10]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org